வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 006 /ஆ1/2022 நாள் : 04.03.2022

---

பொருள் : வேலூர் மாவட்டம் – கல்வித்துறை – சாலை பாதுகாப்பு – அரசு பள்ளி மாணவர்களுக்கு – விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் – போட்டிகள் – ஊர்வலங்கள் நடத்துதல் – சார்பு.

பார்வை : வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.சி1/236/2021. நாள்:31.12.2021.

---

மேற்காண் பொருள் சார்பாக, பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளின், வேலூர் மாவட்டம் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அரசு / நகரவை / நிதிஉதவி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் கட்டுரை போட்டி / பேச்சு போட்டி / ஓவியப்போட்டி நடத்தும் வகையிலும், மாணவர்களை கொண்டு ஊர்வலங்கள் செல்வதால், பொது மக்களிடையே, சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 10.03. 2022 –க்குள் கீழ்கண்டவாறு நடத்தி முடிக்கவும்.

| வ. எண் | பள்ளி / அலுவலகம் | வகுப்பு | போட்டிகள் | மாணவர்கள் தேர்வு | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | அரசு / நகரவை / நிதியுதவி / மேல்நிலைப்பள்ளிகள். | 6 முதல் 8<br>9 முதல் 10<br>11 முதல் 12 | | | |
| 02 | அரசு / நகரவை / நிதியுதவி உயர்நிலைப்பள்ளிகள். | 6 முதல் 8<br>9 முதல் 10 | கட்டுரை<br>பேச்சு<br>ஓவியம் | 03<br>03<br>03 | |
| 03 | வட்டாரக் கல்வி அலுவலர்கள் (நடுநிலைப் பள்ளிகள்) | 6 முதல் 8 | | | |

ஒவ்வொரு நிலையிலும் மூவரை தேர்வு செய்து பரிசுகள் வழங்கிடவும், விழிப்புணர்வு பேரணியும் நடத்த பட வேண்டும். போட்டிகள் மற்றும் பேரணி சார்பான புகைப்படங்கள் இரு நகல்கள் மற்றும் செலவின இரசீது அசல் மற்றும் ஒரு நகல் இணைத்து தேர்வு பெற்ற மாணவர்கள் பட்டியல் இரு நகல்களுடன் 12.03.2022 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் வேலூர் காந்திநகர், ஒருங்கிணைந்த பள்ளி கல்வி (SSA) அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும், என வேலூர் மாவட்ட அனைத்து வகையான தலைமை ஆசிரியர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், மாவட்ட அளவிலான போட்டிகள் 15.03.2022 அன்று வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் மூலமாக நடைபெறும். அதில் பள்ளி அளவில் முதலாவதாக தேர்வு பெற்ற மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்.

ப.ரா.,

| போட்டி நடைபெறும் நாள் | நேரம் | நடைபெறும் இடம் | போட்டிகள் |
|---|---|---|---|
| 15.03.2022 | காலை. 9.30 மணி | காந்திநகர் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி (SSA) அலுவலகம், வேலூர். | கட்டுரை<br>பேச்சு<br>ஓவியம் |

மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளை வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் அவர்கள் நடத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும், இச்சாலைபாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிக்கான, ஒருங்கிணைப்பாளராக, காட்பாடி, நிதியுதவி கல்வி உலகம் உயர் நிலைப் பள்ளி, தலைமை ஆசிரியர் திரு. சிவவடிவு என்பார் செயல்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பம்/xxxxx
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :

1. தலைமை ஆசிரியர்,
   அரசு / நகரவை / நிதியுதவி உயர் மற்றும் மேல் நிலைப்பள்ளி,
   வேலூர்.

2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு
   தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

3. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.

4. தலைமை ஆசிரியர்,
   நிதியுதவி உயர் நிலைப் பள்ளி, (கல்வி உலகம்)
   காட்பாடி, வேலூர் மாவட்டம்,
   அலைபேசி எண். 9944141099

ப.ரா.,